1970 நவம்பர் 28] [திரு. என். வி. நடராசன்]

வதற்கு முன்னர் கணக்குகள் முறையாகத் தணிக்கை செய்யப்பட வேண்டுமென்று போலீஸ் கமிஷனர் கேட்டுக் கொண்டதால், இந்த வழக்கிற்காகவென்றே சிறப்பாக மாநிலக் கணக்குத் துறைத் தலைவரின் அலுவலகத்திலிருந்து தணிக்கை அதிகாரி ஒருவரை நியமிக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது: 2—11—1970 முதற்கொண்டு தணிக்கைப் பணியை அவர் தொடங்கியுள்ளார். தணிக்கை நடந்து வருகிறது. இதற்கிடையில், அப்போதிருந்த தலைமைக் காசாளர் திரு. டி. ஜெயராஜிடமிருந்து பணம் பெற்றுச்சென்றவர்கள் காவல்துறையின் இசைவுடன் பணத்தைத் திருப்பிச் செலுத்த முன் வந்துள்ளனர். அவ்வாறு பெறப்படும் தொகைகள் வசூலிக்கப்பட்டு ஒரு தனிக் கணக்கில் எழுதி வரப்படுகின்றன. தொடக்கப் புலனாய்வுகளிலிருந்து, கூட்டுறவுச் சங்கத்திற்கும் அரசுக்கு சொந்தமான பணம் தற்காலிகமாகவும், நிலையாகவும் நீண்ட காலமாகவே அதாவது 5 ஆண்டுகளுக்கு மேலாகவே கையாடல் செய்யப்பட்டு வந்துள்ளதாகத் தோன்றுகிறது. கூட்டுறவுச் சங்கத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளப் பிடிப்புத் தொகைகளிலிருந்தும் வழங்கப்படாத சம்பளப் பணத்திலிருந்தும், பல தொழிலாளர்களுக்கு எந்த வித அனுமதியுமின்றி கடன்கள் கொடுக்கப்பட்டு வந்திருப்பதாகத் தோன்றுகிறது. இந்தக் கடன்களில் பெரும்பாலானவை திருப்பிச் செலுத்தப்படவில்லை அல்லது வாங்கிய கடன் தொகைக்குக் குறைவாகவே திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளன. இதனால் இருப்புத் தொகை பெருமளவிற்குக் குறைந்துவிட்டது. இதைத் தவிர நிலையான பணக் கையாடல்களும் நடந்துள்ளன. 1957 டிசம்பரில் ஓய்வுபெற்ற முன்னாள் தலைமைக் காசாளர் திரு. என். வரதராஜனும், 16—10—1970 அன்று கைது செய்யப்பட்டார்.

இது குறித்து மிக விரிவாக துப்புத் துலக்கும்பொருட்டு 30—9—1970 வரை இக்கூட்டுறவுச் சங்கத்தின் கணக்குகளை சிறப்புத் தணிக்கை அதிகாரி ஒருவரைக் கொண்டு விரிவாகத் தணிக்கை செய்வதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. இத் தணிக்கை நடந்தேறி வருகிறது.

இத்தகைய பணக் கையாடல்கள் இனி நடைபெறாமல் தடுப்பதற்காக, தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து தொகைகள் பிடிக்கப்பட்டவுடனேயே கூட்டுறவுச் சங்கத்தின் கணக்கில் மத்தியக் கூட்டுறவு வங்கியில் நேரடியாகச் செலுத்தி விடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அன்றாட ரொக்க இருப்பு புத்தக இருப்பையொத்திருக்கிறதாவெனச் சரிபார்க்கும்படி அரசிதழ் பதிவுபெற்ற நேர்முக உதவியாளருக்கு எழுதுபொருள்—அச்சுத்துறை இயக்குநரால் அலுவலக ஆணை ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. அரசினர் மசோதாக்கள்

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படாமல் பாதுகாப்பு) திருத்த மசோதா

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I beg leave of the House to introduce the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection form Eviction) Amendment Bill, 1970.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. THIRU S. MADHAVAN : Sir I introduce the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

5. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகள் கட்டண மதிப்பீடுகள் (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நீதிமன்ற கட்டணங்கள் வழக்குகள் கட்டண மதிப்பீடுகள் (திருத்த) மசோதாவை இப்பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

4. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகள் கட்டண மதிப்பீடுகள் (திருத்த) மசோதா

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I beg leave to introduce the Tamil Nadu Court-Fees and Suits Valuation (Amendment) Bill, 1970.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. THIRU S. MADHAVAN : Sir I introduce the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (இரண்டாம் திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) மதோசாவை சட்டப் பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.